සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Geography

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	புவியியல்

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**
- **இலக்கம் 01 தொடக்கம் 05 வரையான வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. வடமேல் மாகணத்திற்கு அண்மையில் உள்ள மாகாண சோடி எது?
1. வடக்கு மற்றும் கிழக்கு
2. வடமத்திய மற்றும் மத்திய
3. தெற்கு மற்றும் சப்ரகமுவ
4. ஊவா மற்றும் சப்ரகமுவ

02. நீங்கள் சூரியன் உதிக்கும் திசையை பார்த்து நிற்கும் போது உங்கள் வலது கை பக்கம் காட்டும் திசை எது?
1. வடக்கு திசை
2. கிழக்கு திசை
3. தெற்கு திசை
4. மேற்கு திசை

03. கீழே கொடுக்கப்பட்டுள்ள நாடுகளில் தீவு அல்லாத நாடு எது?
1. பிரித்தானிய
2. ஜப்பான்
3. நியூசிலாந்து
4. பிரான்ஸ்

04. பின்வரும் சோடிகளில் சரியான சோடி எது?
1. காற்றின் வேகம் - அனிலமானி
2. முகில் - வெப்பமானி
3. காற்றின் திசை - மழைமானி
4. மழை வீழ்ச்சி - பரோமீட்டர்

05. பிரம்பு உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடம்.
1. தும்பரை
2. அம்பலங்கொடை
3. ரதாவடுன
4. மொரட்டுவ

- **06 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.**

06. பௌத்தர்களின் சமய விழாவாக .....(ரமழான் / வெசக்) விழாவை குறிப்பிடலாம்.

07. நிலத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தும் போது..... (நிலச்சரிவு / சுனாமி) ஏற்படும்

08. சக்தி மூலகங்களை ..... (பாதுகாப்பாக / சிக்கனமாக) பாவிப்பதன் மூலம் உமக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும்.

09. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான குறுகிய தூரம் ..... (32Km / 34 Km) ஆகும்

Past Papers Wiki

10. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் .....(வங்காளவிரிகுடா / மன்னார் விரிகுடா) அமைந்துள்ளது.

- **11 தொடக்கம் 15 வரை காணப்படும் அ மற்றும் ஆ நிரல்களை சரியாக பொறுத்தி இணைக்க.**

அ நிரல்	ஆ நிரல்
11. வானத்தில் முகில்களின் இயல்பை அறிந்து கொள்ளல்	A. அரச ஒசுசல
12. சலுகை விலையில் மருந்துகளை பெற்றுக் கொள்ளல்	B. உயிர்வாயு
13. தாவர வளர்ச்சிக்கு உதவுவது	C. நைதரசன் வாயு
14. முறையற்ற நிலப் பயன்பாடு	D. அவதானித்தல்
15. சமையலறை கழிவு பொருட்களை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்	E. சுற்றுச்சூழல் பாதிக்கப்படல்

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் √ எனவும் பிழையான × எனவும் தரப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் இடுக.**

16. அமில மழை பெய்வதனால் நீர் மாசடையாது. (.....)

17 சென்பகம் கழிவு பொருட்களை உண்ணும். (.....)

18. ஊவா மாகாணம் இரண்டு மாவட்டங்களை கொண்டது. (.....)

19. ஒடுங்கள் நிலையை அடைந்த பின்னர் மழை பெய்யாது. (.....)

20. சுத்திகரிக்கப்படாத எண்ணெயிலிருந்து எரிவாயு பெற்றுக் கொள்ள முடியும். (.....)


(02×20=40 புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி II

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினா கட்டாயம்**

01. கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்தியப் படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



I. இலக்கம் 1,2,3 இனால் காட்டப்பட்டுள்ள நதிகளை முறையாகப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

II. B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கடலை பெயரிடுக. (02 புள்ளிகள்)

III. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நீரிணியை பெயரிடுக. (02 புள்ளிகள்)

IV. இலக்கம் 4 மற்றும் 5 இனால் காட்டப்பட்டுள்ள இடங்களை பெயரிடுக. (02 புள்ளிகள்)

V. C,D,E இனால் காட்டப்பட்டுள்ள தரைதோற்ற அம்சங்களை பெயரிடுக. (03 புள்ளிகள்)

02. I. கரையோர சூழலில் அமைந்துள்ள வீடுகளில் வாழ்வோர் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

II. பின்வரும் நடவடிக்கைகளுக்கு உரிய விலங்குகள் ஒவ்வொன்றை எழுதுக.

A. நச்சுத்தன்மையுடைய ஊர்வன.

B. சூழலுக்கு உதவி செய்யும் விலங்கு.

C. இரவில் உலாவும் விலங்கு.

D. நோய்களை பரப்பும் விலங்கு. (04 புள்ளிகள்)

III. a கைத்தொழில்களினால் ஒரு பிரதேசத்திற்கு கிடைக்கும் நன்மைகள் மூன்றை எழுதுக. (03 புள்ளிகள்)

b. பாரம்பரிய கைத்தொழில்கள் என்றால் என்ன? என்பதை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

03. I. பின்வரும் நகரங்களில் காணப்படும் வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஒவ்வொன்றை எழுதுக.

A. திருகோணமலை

B. காலி

C. கண்டி (03 புள்ளிகள்)

II. இலங்கையின் அமைவிடம் பொருளாதாரத்துக்கு செல்வாக்கு செலுத்தக்கூடியதாய் உள்ளது என்பதற்கு இரண்டு காரணங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

III. A. இலங்கையின் சார்பு அமைவிடத்தை சரியாக குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

B. "விரைவாக அபிவிரித்து அடைந்துவரும் இலங்கை" என்ற கூற்றை சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

04. I. குருநாகல் மாவட்டத்தை அண்டிய மாவட்டங்கள் இரண்டை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. பின்வரும் விபரங்களுக்கு அமைய சரியான திசைகளை குறிப்பிடுக.

A. வடக்கு திசைக்கும் மேற்கு திசைக்கும் இடையில் …….. திசை அமைந்துள்ளது.

B. தெற்கு திசைக்கும் கிழக்கு திசைக்கும் இடையில் ……திசை அமைந்துள்ளது.

C. கிழக்கு திசைக்கும் வடக்கு திசைக்கும் இடையில் …….. திசை அமைந்துள்ளது.

D. மேற்கு திசைக்கும் தெற்கு திசைக்கும் இடையில் …….. திசை அமைந்துள்ளது.

(04 புள்ளிகள்)

III. A. வெப்பநிலை, மழைவீழ்ச்சி மற்றும் காற்றின் வேகம் என்பனவற்றை அளவிடும் அலகுகளை பெயரிடுக. (03 புள்ளிகள்)

B. மழை வீழ்ச்சியினால் கிடைக்கும் நன்மை தீமைகள் ஒவ்வொன்றை குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

05. I. விவசாய நடவடிக்கையின் பிரதான பகுதிகள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களை பெயரிடுக. (04 புள்ளிகள்)

உற்பத்திகள்	பயன்படுத்தப்படும் மூலப்பொருள்
A. சுண்ணாம்பு	
B. ஓடு	
C. டயர்	
D. சீனி	

III. A. வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளை முறையாக பயன்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

B. வளிமாசடைதலை குறைப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை சுருக்கமாக விவரிக்க.

(03 புள்ளிகள்)

06. I. பாடசாலை வளவின் திட்டப்படத்தை அமைக்கும் போது அவ்வாறான படத்தில் காணக்கூடிய முக்கிய அம்சங்கள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. நீரியல் வட்டத்தின் செயல்பாடுகளை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. A. வீட்டில் பயன்படுத்தப்படும் சக்தி மூலகங்கள் இரண்டை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

B. சக்தி மூலகங்களை பயன்படுத்தும் போது வீண்விரயமாதளை தடுப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விவரிக்க (02 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank